# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## சமூக அறிவியல்

நேரம் : 3.00 மணி பகுதி - அ மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

2. இலத்தீன் அமெரிக்காவுடன் "அண்டை நாட்டுடன் நட்புறவு" எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?
அ) பிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன்
இ) உட்ரோ வில்சன் ஈ) ஐசனோவர்

3. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
அ) கவாசாகி ஆ) டோக்கியோ இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி

4. அமெரிக்க ஐக்கிய நாடும், அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் ________ ஆகும்.
அ) சீட்டோ ஆ) நேட்டோ இ) சென்டோ ஈ) வார்சா ஒப்பந்தம்

5. i) இராமகிருஷ்ணா மிஷன் கல்வி, உடல்நலம், பேரிடர்களின் போது நிவாரணப் பணி செய்தல் போன்ற சமூகப் பணிகளில் செயலூக்கத்துடன் ஈடுபட்டது.
ii) பேரின்ப நிலை எய்தும் பழக்கங்களின் மூலம் ஆன்ம ரீதியாக இறைவனோடு இணைவதை இராமகிருஷ்ணர் வலியுறுத்தினார்.
iii) இராமகிருஷ்ணர் இராமகிருஷ்ணா மிஷனை ஏற்படுத்தினார்.
அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி இ) (iii) சரி ஈ) (i) மற்றும் (iii) சரி

6. "சத்யார்த்த பிரகாஷ்" என்னும் நூலின் ஆசிரியர் யார்?
அ) தயானந்த சரஸ்வதி ஆ) அயோத்திதாசர்
இ) அன்னிபெசன்ட் ஈ) நாராயணகுரு

7. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்
அ) 2500 கி.மீ ஆ) 2933 கி.மீ இ) 3214 கி.மீ ஈ) 2814 கி.மீ

8. கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு ________ காற்றுகள் உதவுகின்றன.
அ) லூ ஆ) நார்வெஸ்டர்ஸ் இ) மாஞ்சாரல் ஈ) ஜெட் காற்றோட்டம்

9. இந்தியாவில் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது ________.
அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை

10. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு

11. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள் ________.
அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்

12. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்
இ) மாநில அரசாங்கம் ஈ) நாடாளுமன்றம்

13. ஒரு மசோதாவை நிதி மசோதா வா (அ) இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்
அ) குடியரசுத் தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஈ) லோக்சபாவின் சபாநாயகர்

14. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018-19 ல ________ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.
அ) 91.06 ஆ) 92.26 இ) 80.07 ஈ) 98.29

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா) 10 x 2 = 20

15. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.
16. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?
17. பெவரிட்ஜ் அறிக்கை குறித்து நீ அறிந்தது என்ன?
18. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.
19. இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
20. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.
21. "பருவமழை வெடிப்பு" என்றால் என்ன?
22. பன்னாட்டு வணிகம் - வரையறு.
23. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
24. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.
25. உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதி வரையறை அதிகாரங்கள் யாவை?
26. நாட்டு வருமானம் - வரையறு.
27. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.
28. பன்னாட்டு நெடுஞ்சாலைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.

பகுதி - இ

III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 42 கட்டாய வினா) 10 x 5 = 50

29. ***கோடிட்ட இடங்களை நிரப்புக.***
   i) சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் ________.
   ii) இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிற்கிடையேயான ஒப்பந்தம் ________ என அழைக்கப்பட்டது.
   iii) உலகின் மிக நீளமான அணை ________.
   iv) தமிழ்நாட்டின் முதல் பெண் ஆளுநராக இருந்தவர் ________.
   v) இரண்டாம் துறையை வேறுவிதமாக ________ துறை என அழைக்கலாம்.
30. அ) ***வேறுபடுத்துக :***
   i) வானிலை - கால நிலை ii) ராஃபி பருவம் - காரிப் பருவம்
   ஆ) ***காரணம் கூறுக :*** மழைநீர் சேமிப்பு அவசியம்
31. பன்னாட்டு சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.
32. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.
33. 19ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.
34. தீபகற்ப இந்திய ஆறுகளைப் பற்றி விவரி.
35. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?
36. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
37. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை திறனாய்வு செய்க.
38. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
39. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
40. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
41. ***காலக்கோடு :*** ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை எழுதுக - 1930-1950
42. ***உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.***
   1) பிரிட்டன் 2) துருக்கி 3) டோக்கியோ 4) மொராக்கோ 5) இத்தாலி

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2 x 8 = 16

43. அ) இத்தாலியில் முசோலினியின் எழுச்சி பற்றி விவரி. ***(அல்லது)***
   ஆ) பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகள் பற்றி விவரி.
44. ***கீழ்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.***
   1) K2 சிகரம் 2) கரிசல்மண் / ஒரு பகுதி 3) மும்பை ஹை
   4) பாக் நீர்ச்சந்தி 5) கட்ச் வளைகுடா 6) நெய்வேலி
   7) சோழமண்டல கடற்கரை 8) சென்னை-கொல்கத்த ரயில் போக்குவரத்து.

******